பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

16 10 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆப்பிரிக்க பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று அல்ஜீரியாவில் இருந்து, **Mauritania** புறப்பட்டு சென்றார்.
2. எல்லைதாண்டிய பயங்கரவாதம் மற்றும் பிரிவினை சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உலக நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
3. வாரணாசியில் பல்தட இருப்புப்பாதை திட்டத்திற்கும், உத்தரப்பிரதேசத்தில் கங்கை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க 2 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
4. தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை அதிகாலை சென்னை அருகே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
5. இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<<>>>>**

ஆப்பிரிக்காவில் மூன்று நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று தமது அல்ஜீரிய பயணத்தை முடித்துக்கொண்டு, **Mauritania** புறப்பட்டு சென்றார்.

அல்ஜீரிய பிரதமர் திரு **Nadir Larbaoui** மற்றும் உயரதிகாரிகள், குடியரசுத் தலைவருக்கு பிரியா விடை கொடுத்து அனுப்பினர்.

**Mauritania** -வில் ஒருநாள் தங்கியிருக்கும் குடியரசுத் தலைவர், அந்நாட்டு அதிபர் திரு **Mohammed Ghazouani** -யை சந்தித்து பேசவுள்ளார்.

அந்நாட்டு அமைச்சர்கள் பங்குபெறும் உயர்மட்ட குழுவினருடன் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகள் குறித்து திருமதி திரௌபதி முர்மு ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்த சந்திப்பிற்கு பின்னர், இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து அவர் கலந்துரையாடவுள்ளார்.

நாளை மாலை **Mauritania** பயணத்தை முடித்துக்கொண்டு, குடியரசுத் தலைவர் **Malawi** செல்லவுள்ளார்.

**<<<<<<>>>>**

நிலையான ஆட்சியையும், அமைதியையும் நிலைநாட்ட பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாதில் நடைபெற்றுவரும் 23-ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், எல்லை தாண்டிய பயங்கரவாதம், உள்நாட்டு தீவிரவாதம் மற்றும் பிரிவினை சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலமும், எரிசக்தி, போக்குவரத்து கட்டமைப்பு மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகளை வளர்ப்பதன் மூலமும் தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாறுபாடுகளால் ஏற்படும் சவால்கள், ஏற்றுமதி, இறக்குமதியில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், உலக பொருளாதார வளர்ச்சியை பெரிதும் பாதிப்பதாக அமைச்சர் கூறினார்.

அண்டை நாடுகளின் இறையாண்மை மற்றும் எல்லை பிரச்சினைகளுக்கு நேர்மையான முறையில் தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து வளங்களை ஆக்கப்பூர்வமான வகையில் பயன்படுத்துவது மற்றும் அனைத்துத்துறைகளையும் ஒன்றிணைத்து செயல்படுவது போன்ற நடவடிக்கைகளால் முதலீடுகளையும், வர்த்தக கட்டமைப்பையும் விரிவாக்கம் செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பருவநிலை சவால்களை சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொண்டால், அனைத்து நாடுகளுக்கும் அதன் பயன்கள் கிடைக்கும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியா முன்னெடுத்துச் செல்லும் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு ஊக்கம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழலோடு இணைந்த வாழ்க்கை முறை, யோகாசன பயிற்சி, சிறுதானியங்களின் பயன்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களுக்கான மின்னணு கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஐ நா பாதுகாப்பு சபையை ஒட்டுமொத்தமாக மாற்றியமைக்கும் வகையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ நா-வில் வளரும் நாடுகளுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

**<<<<<<>>>>**

2025-26-ஆம் ஆண்டு ரபி பருவ பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்குபின்னர் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், கடுகுக்கு குவிண்டாலுக்கு 300 ரூபாயும், கொள்ளு மைசூர் பருப்பு ரகங்களுக்கு குவிண்டாலுக்கு 275 ரூபாயும், இதர பருப்பு வகைகளுக்கு குவிண்டாலுக்கு 210 ரூபாயும் குறைந்த பட்ச ஆதரவு விலை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி மூன்று சதவீதம் உயர்த்தப்படுவதாகவும் அவர் அறிவித்தார்.

இந்த அகவிலைப்படி உயர்வு கடந்த ஜூலை மாதம் முதல் அமலுக்கு வருகிறது.

இதனால், 49 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 64 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.

வாரணாசி பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா பல்தட இருப்புப்பாதை திட்டத்திற்கும், உத்தரப்பிரதேச மாநிலத்தின் கங்கை நதியின் குறுக்கே புதிய ரயில் மற்றும் சாலை போக்குவரத்து பாலம் அமைக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த இருப்புப்பாதை மற்றும் சாலை திட்டங்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, போக்குவரத்து செலவு கணிசமாக குறைவதோடு, பயண நேரம் கணிசமாக குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த திட்டத்திற்காக 2 ஆயிரத்து 642 கோடி ரூபாய் செலவிடுவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>

ஹரியானா முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, பிஜேபி சட்டமன்ற கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா முன்னிலையில் பஞ்ச்குலாவில் நடைபெற்ற பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் திரு நயாப் சிங் சைனி, ஹரியானா மாநில பிஜேபி சட்டமன்ற கட்சித் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஹரியானா முதலமைச்சராக மீண்டும் பொறுப்பேற்கவுள்ள திரு நயாப் சிங் சைனிக்கு மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ், மத்திய அமைச்சர்கள் திரு தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இக்கூட்டத்திற்குபின் ஹரியானா ஆளுநர் திரு பண்டாரு தத்தாத்ரேயாவை, பிஜேபி உறுப்பினர்களுடன் சந்தித்து மீண்டும் ஆட்சி அமைக்க திரு நயாப் சிங் சைனி உரிமை கோரவுள்ளார்.

நாளை பஞ்ச்குலாவின் ஷாலிமர் மைதானத்தில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

இந்தியாவின் செமி கண்டெக்டர் சந்தை 2030-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு உயரும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தியோடு இணைந்த சலுகைத்திட்டம் போன்ற அரசின் நடவடிக்கைகளால் இதற்கான சந்தை விரைவாக வளர்ந்து வருவதாகவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்திய மின்னணு செமி கண்டெக்டர் கூட்டமைப்பு நடத்திய ஆய்வில், செல்போன்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகளின் சந்தை 75 சதவீத வருவாயை ஈட்டித்தரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, மருத்துவம் மற்றும் தானியங்கி தொழில்களிலும், மின்னணு துறையிலும் செமி கண்டெக்டர்களின் தேவை அதிகரித்து வருவதாகவும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2023-ஆம் ஆண்டு 45 பில்லியன் டாலராக இருந்த செமி கண்டெக்டர் சந்தை மதிப்பு, ஆண்டுக்கு 13 சதவீதம் உயர்ந்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>**

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் கனமுதல், அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை அதிகாலை நெல்லூர் - புதுச்சேரிக்கும் இடையே சென்னையையொட்டி கரையை கடக்கக்கூடும் என்று கூறினார்.

சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அதிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு பாலச்சந்திரன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் - 60 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பெங்களூருவில் நடைபெறவிருந்த இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.
இரு அணிகளுக்கும் இடையே மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரண்டாவது போட்டி இம்மாதம் 24-ஆம் தேதி புனேயிலும், மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி மும்பையிலும் நடைபெறவுள்ளது.

----------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் இறுதிப்போட்டியில் இந்தியாவின் **Akhil Sheoran** வெண்கலப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 50 மீட்டர் ரைபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

லண்டன் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி மற்றும் பிரக்ஞானந்தா அரையிறுதிக்கு முன்னேற்றியுள்ளனர்

**<<<<<<END>>>>**